# டவர் மண்டப திரையரங்கு மன்றம் - 2011

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து டவர் மண்டப திரையரங்கு மன்றத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

மீளாய்வாண்டின் போது அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்டிருந்த ரூபா 24,250,000 தொகையான மூலதன மானியங்களை கணக்கிடுகையில் இலங்கை கணக்கீட்டு நியம இல. 24 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) டவர் மண்டப திரையரங்கு மற்றும் எல்பின்ஸ்டன் கலையரங்கை புனரமைப்புச் செய்த போது ஏலவிற்பனை செய்த மற்றும் வெளித்தரப்பினருக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டிருந்த பொருட் பதிவுப் பொருட்களின் பெறுமதி கணிக்கப்பட்டு கணக்குகளில் இருந்து அகற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 23 மில்லியன் தொகையான ஏழுநாள் அழைப்பு வைப்புக்களில் முதலீடு செய்து ஆண்டிற்கான நிரந்தரமான வட்டி வருமானத் தொகையான ரூபா 176,542 வருமானமாக கணக்கிடப்படுவதற்குப் பதிலாக ஆண்டின் போது பெறப்பட்டிருந்த வட்டி வருமானமான ரூபா 74,363 தொகை மாத்திரம் வருமானமாக கணக்கிடப்பட்டிருந்தது.

### 1.2.3 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மன்றத்தினால் நாடகப் பயிற்சி வகுப்புகள் நடாத்தப்படுவதற்காக இடவசதிகள் வழங்குவது தொடர்பாக 3 ஆண்டுகளுக்கு மேலான காலமாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 212,038 தொகையான நிலுவைத் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ருக்மணி தேவி ஞாபகார்த்த மண்டபத்தில் நாடகப் பயிற்சி வகுப்புகள் நடாத்தப்படுவதற்காக இரு வெளித்தரப்பினருக்கு 2007 ஆம் ஆண்டின் போது இடமளிப்பதன் மூலம் அவர்களிடம் இருந்து வாடகைக் கட்டணமாக ரூபா 141,240 தொகை அறவிடப்படுவதற்கு இருக்கையில் அத் தொகை அறவிடப்படாது 2011 ஆம் ஆண்டின் போதும் வகுப்புகளை நடாத்துவதற்காக அவர்களுக்கு இடவசதி வழங்கப்பட்டிருந்ததுடன் இதற்கான வாடகைக் கட்டணமாக ரூபா 30,800 இற்கு அவர்களிடம் இருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 7 சந்தர்ப்பங்களின் ரூபா 88,697,761 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களுக்காக பதிவுப் பொருள் பதிவேடு, பொருள் மெய்மையாய்வு அறிக்கை, மீதிகளின் உறுதிப்படுத்தல், விபரமான பட்டோலைகள் மற்றும் ஏனைய நிறுவகங்களுக்கு வழங்கப்பட்ட நன்கொடைகளுக்கான விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

### 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆம் திகதிய | பொது முயற்சிகளில் மிகையான பணம் முதலீடு செய்கையில் திறைசேரி அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மன்றத்தினால் 2011 ஆம் ஆண்டின் போது |

| | | |
|---|---|---|
| | பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 ஆம் 8.2.3 ஆம் பந்தி | மேற்கொள்ளப்பட்ட ரூபா 6 மில்லியன் தொகையான நிலையான வைப்பு மற்றும் ரூபா 23 மில்லியன் தொகையான குறுங்கால கேள்வி வைப்புக்களின் முதலீட்டிற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. |
| (ஆ) | அரசாங்க நிதிப் பிரமாணங்கள் நி.பி. 371(2)(ஆ) | குறித்த செயற்பாட்டிற்கான துணைக் கட்டுநிதிகளாக வழங்கப்படக்கூடிய ஆகக் கூடிய தொகை ரூபா 20,000 ஆன போதிலும் அவ் அந்க எல்லையினை மீறி ஆண்டின் போது 5 சந்தர்ப்பங்களில் 3 உத்தியோகத்தர் களுக்கு ரூபா 497,000 தொகை முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. |
| | நி.பி. 102, 507(2) மற்றும் 757(2) | 2009 வருடாந்த பொருள் மெய்மையாய்வின் போது கண்டறியப்பட்ட 83 வகையான பொருட்களின் பற்றாக்குறை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | நிதிப் பிரமாணங்கள் 756 மற்றும் 757 | ஒவ்வொரு வருடத்தின் திசெம்பர் 15 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மிய திகதியில் மெய்மையாய்வுச் சபை நியமிக்கப்பட்டு பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மன்றத்தினால் ஒவ்வொரு வருடமும் மெய்மையாய்வுச் சபை அடுத்துவரும் ஆண்டின் இறுதிப் பகுதியிலேயே நியமிக்கப்பட்டிருந்தது. 2011 ஆம் ஆண்டிற்காக பொருள் மெய்மையாய்வு 2012 யூன் மாதம் வரை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | 2003 ஜுன் 02 ஆந் திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9 ஆம் அத்தியாயத்தின் 9.3.1(vii) ஆம் பந்தி | பதில் கடமையானது நிரந்தர நியமனம் மேற்கொள்ளப்படும் வரையில் தற்காலிக செயற்பாடாகவும், உரிய பதவியில் நிரந்தர நியமனத்தை தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும் எனவும் பதில் நியமனம் 3 மாத காலத்திற்கு மட்டுப்படுத்தப்பட வேண்டும் எனவும் |

| | | |
|---|---|---|
| | | குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இந்த அறிவுறுத்தல்களுக்கு முரணாக மன்றத்தினால் 2 பதவிகளுக்காக பதில் நியமனம் வழங்கப்பட்டு 38 மாதங்கள் மற்றும் 22 மாதங்கள் கால எல்லைக்காக இரு உத்தியோகத்தர்களுக்கு பதில் கடமைக் கொடுப்பனவாக ரூபா 252,814 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) | அச் சுற்றறிக்கையின் 8.3.5 ஆம் பந்தி மற்றும் 2008 யூன் 26 ஆம் திகதிய 13/ 2008 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 9 ஆம் பந்தி | சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு முரணாக இரு உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டு மாதாந்தம் ரூபா 17,000 ஆக எரிபொருள் படி செலுத்தப்பட்டிருந்தது. |
| (உ) | 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 02(1) ஆம் பந்தி | நிறுவகத் தலைவர்களும் விரலடையாளமிடும் இயந்திரத்தினைப் பயன்படுத்துவதன் மூலம் வேலைத் தளத்திற்கு வருகை தருதலும் வெளிச் செல்லலும் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் மன்றத்தின் பணிப்பாளர் நாயகம் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான டவர் மண்டப திரையரங்கு மன்றத்தின் நிதிவிளைவுகள் ரூபா 11,657,128 தொகையான பற்றாக்குறையானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 8,455,736 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதிசார் விளைவுகளில் ரூபா 3,201,392 தொகையான வீழ்ச்சிக்காக நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 3,138,069 ஆல் குறைவடைந்திருந்தமை முக்கியமாகத் தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

2011 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பின்வரும் செயற்பாடுகள் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

| செயற்பாட்டுத்திட்டத்தின் குறியீட்டு இல. | இலக்கு | செயலாற்றல் |
|---|---|---|
| 1405, 4.6 | யுனெஸ்கோ நிதியத்தின் கீழ் 50 செயலமர்வுகளை நடாத்துதல் | செயலமர்வுகள் எதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| 1405, 5.5 | சம்புத்வத்த ஜயன்திக்காக 70 குறுநாடகங்களை பங்குபற்றச் செய்து குறு நாடாகப் போட்டி ஒன்றை நடாத்தல் | குறு நாடகங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| 2001 | எல்பின்ஸ்டன் திரையரங்கை பழுதுபார்த்து நிறப்பூச்சிடல் | பழுதுபார்த்து நிறப்பூச்சிட்டிருக்கவில்லை. |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மன்றத்தினால் தாபனவிதிக்கோவையின் II ஆம் தொகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 22.1 ஆம் பிரிவிற்கு திருத்தப்பட்ட 2004 திசெம்பர் 15 ஆம் திகதிய 06/2004 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக 2009 நவம்பர் முதல் வேலையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்ட மன்றத்தின் முன்னாள் கணக்காளருக்கும் 2011 மார்ச் முதல் கட்டாய லீவில் அனுப்பிவைக்கப்பட்ட முன்னாள் நிதிப் பணிப்பாளருக்கும் எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை தாமதமாக்கப்பட்டதை காரணமாகக் கொண்டு கணக்காளருக்கும் நிதிப் பணிப்பாளருக்கும்

முறையே ரூபா 367,525 தொகையும் ரூபா 535,092 தொகையுமாக சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) டவர் மண்டபத்தின் 100 ஆண்டுகள் பூர்த்தியினை முன்னிட்டு நாடக வாரம் ஒன்றை ஏற்பாடு செய்து அந் நாடக வாரத்தில் 5 நாடகங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்ததுடன் நாடகக் காட்சிகளில் இருந்து கிடைக்கப்பெற்ற வருமானம் ரூபா 122,800 ஆன போதிலும் நாடகங்களை நடாத்துவதற்காக ரூபா 422,504 தொகை செலவிடப்பட்டிருந்தது. ஒவ்வொரு நாடகத்திலும் 40% இனைப் பார்க்கிலும் கூடிய டிக்கட்கள் எஞ்சி இருந்ததுடன் 2 நாடகங்களுக்கு அந்த அளவு 75% இற்கும் மேலாகக் காணப்பட்டது.

## 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) டவர் மண்டப திரையரங்கு மன்றத்திள் பஸ் வண்டியினை நாடக கலையின் மேம்பாட்டிற்காக சலுகை விலைக்கு வழங்கல் நிறுவகத்தின் கொள்கையாகத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அந்த பஸ் வண்டி ஓடியிருந்த மொத்த கி.மீ. அளவில் 60% ஆனது வெளித் தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) மன்றத்தின் பணிப்பாளர் நாயகம் அலுவலகத்திற்கு வருகை தருதல் மற்றும் வெளிச்செல்லல் அறிக்கையிடப்பட்டிராமையால் அவர் சேவைக்கு வருகைதராத நாட்கள் தொடர்பான விபரம் சரியாக இனங்காணப்பட முடியாதிருக்கையில் அவருக்கு உரித்தான வைத்திய லீவுகள் அனைத்தும் மீதப்படுத்தப்பட்ட லீவாகக் கருதப்பட்டு 2011 ஆம் ஆண்டின் லீவு நாள் கொடுப்பனவாக ரூபா 55,030 அவருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

## 3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

2000 - 2008 காலப்பகுதிக்கான ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியினை கணிப்பிடப்படுகையில் வாழ்க்கைப் படிச் செலவினக் கொடுப்பனவு உள்ளடக்கப்பட்டு கணிப்பிடப்பட்டிராத காரணத்தினால் மீளாய்வாண்டின் போது மிகைக்கட்டணமாக ரூபா 270,632 தொகை அந் நிறுவகத்திற்குச் செலுத்தப்பட நேர்ந்தது.

## 4. கணக்களிதன்மையும் நல்ஆளுகையும்

### 4.1 கணக்குகளைச் சமர்ப்பித்தல்

2011 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 பெப்ரவரி 28 ஆம் திகதியோ அல்லது அத் திகதிக்கு முன்னரோ கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிதிக்கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 25 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 4.2 கூட்டுத்திட்டம்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5 ஆம் அத்தியாயத்தின் 5.1.1 ஆம் பந்தியின் பிரகாரம் மன்றத்தின் நோக்கங்களையும் இலக்கங்களையும் அடைந்துகொள்ளக் கூடிய வகையில் ஆகக் குறைந்தது 3 வருட காலத்திற்காக கூட்டுத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

2011 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டில் உள்ளடக்கப்பட்ட தரவுகளுக்கும் உள்ளபடியான தரவுகளுக்கும் இடையே 21% முதல் 274% வரையான முரண்கள் காணப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்.

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் மன்றத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு அவ்வப்போது கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(i) செயல் நடவடிக்கைத் திட்டங்களை அமுல்ப்படுத்தல்

(ii) பதவியணியினர்களைச் சேர்த்துக்கொள்ளல்

(iii) பதிவுப் பொருள் பதிவேட்டைப் பேணல் மற்றும் பொருள் மெய்மையாய்வு

(iv) முற்பணம் மீதான கட்டுப்பாடு

(v) வாகனப் பயன்பாடு.